## செங்கோட்டை நகராட்சி
## சாதாரண கூட்டம்

**செங்கோட்டை நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் 2025ம் ஆண்டு மே 27 செவ்வாய்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற இருக்கின்றது. எனவே துணைத் தலைவர் அவர்கள் மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் வருகை தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.**

**மன்றப்பொருள் : 01**

செங்கோட்டை நகராட்சி அலுவலக பணிக்காக 2025-2026ம் ஆண்டிற்கு தேவைப்படுகின்ற படிவங்கள், பதிவேடுகள், எழுது பொருட்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு 22.04.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி அலுவலக பணிக்காக 2025-2026ம் ஆண்டிற்கு தேவைப்படுகின்ற படிவங்கள், பதிவேடுகள், எழுது பொருட்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு | திருமுல்லைவாயில் ஸ்டோஷனரி பிரிண்டிங் கோ-ஆப் சொசைட்டி, சென்னை | ரூ.3,37,712/- |
| 2 | | அரும்பாக்கம் ஸ்டோஷனரிஸ் பிரிண்டிங் கோ-ஆப் சொசைட்டி, சென்னை | ரூ.3,70,022/- |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருமுல்லைவாயில் ஸ்டோஷனரிஸ் பிரிண்டிங் கோ ஆப் சொசைட்டி, சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம். செலவினத் தொகையை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 02**

செங்கோட்டை நகராட்சி அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் குத்தகை உரிமத்திற்கு 30.04.2025 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. பொது ஏலத்தில் கீழ்க்கண்ட இரண்டு நபர்கள் விபரப்படி

| வ.எண் | பணியின் பெயர் | குத்தகைதார் பெயர் | உட்சபட்ட ஏலக கேள்வி |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமம் | L.முத்துமாரியப்பன் | ரூ.65,200/- |
| 2 | | L.சுப்பிரமணியன் | ரூ.65.250/- |

எனவே பட்டியலில் கண்டவாறு அரசு மதிப்பை விட ஏலக் கேள்வி ரூ.62,250/- கூடுதலாக கேட்ட திரு.L.சுப்பிரமணியன் என்பவர் ஏலக் கேள்வி கோரியுள்ளதால் மேற்படி குத்தகை உரிமத்தினை 2025-2026ம் ஆண்டு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று நிதியாண்டிற்கு உரிமம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்:3090/2015/அ1

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 03**

தஞ்சாவூரை சேர்ந்த sky Ad என்ற நிறுவன கடிதத்தில் செங்கோட்டை நகராட்சியில் நகாரட்சி பேருந்து நிலையம், ரவுண்டானா, ஒரியண்ட் டியூபவர் மின்கம்பங்கள், பயணியர் நிழற்குடைகள், மாநகராட்சி அறிவிப்பு பலகைகள், நவீன தெருப் பெயர் பலகைகள், போக்குவரத்து சிக்னல்கள், காவல்துறை அறிவிப்பு கூடாரங்கள் மற்றும் LED பலகைகள் ஆகியவை விளம்பரதாரர் உதவியுடன் பழுது பார்த்தும், புதிதாக நிறுவியும் பராமரித்து தர அனுமதி கோரியுள்ளது. விளம்பரதாரர் உதவியுடன் இலவசமாக செய்து தருவதாக தெரிவித்துள்ளதால் மேற்படி நிறுவனத்திற்கு அனுமதி வழங்குவதற்காக மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் ஆலோசித்து அனுமதி வழங்கலாம்.

**மன்றப்பொருள் : 04**

செங்கோட்டை நகராட்சியில் Solid Waste Management (SWM (U)) 2.0 திட்டத்தின் கீழ் கழிவு நீர் உறிஞ்சும் வாகனம் (Cesspool Tanker Lorry) ரூ.43.25 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டது. இவ்வாகனத்தை பரிசோதனை செய்து மூன்றாம் தரப்பு ஆய்வறிக்கை மேற்கொண்ட முதல்வர், அரசு பொறியியல் கல்லூரி, திருநெல்வேலி அவர்களுக்கு ஆய்வு கட்டணம் ரூ.23,600/- கேட்பு வரப்பெற்றுள்ளதை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலம்.
2) மேற்கண்ட செலவினத் தொகையை வருவாய் முலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 05**

செங்கோட்டை நகராட்சி அலுவலக வளாகம் முழுவதும் CCTV கேமராக்கள் பொருத்த நகர்மன்ற தீர்மான எண்:121, நாள்: 30.04.2025 அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் 05.05.2025 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | செங்கோட்டை நகராட்சி அலுவலக வளாகம் முழுவதும் CCTV கேமராக்கள் பொருத்தும் பணி | ரூ.3.00 இலட்சம் | Sky Line Computer | OJAS Power Solution |
| | | | 0.01% குறைவு | 1.5% அதிகம் |

வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள Sky Line Computer நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றப்பொருள் : 06**

செங்கோட்டை நகராட்சி பகுதியில் மாண்புமிகு சட்டப் பேரவை மானியக் கோரிக்கை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2025-2026ன் கீழ் ரூ.490.00 இலட்சத்தில் குடிநீர் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.490.00 இலட்சம். இதில் உள்ளாட்சி பங்குத் தொகை ரூ.90.00 இலட்சம் ஆகும். மேற்படி உள்ளாட்சி பங்குத் தொகையினை செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) அரசின் கொள்கை திட்டம் சார்ந்தது என்பதால் மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) குடிநீர் அவசர அவசியம் கருதியும் மன்றம் அனுமதிக்கலாம். செலவின தொகையை குடிநீர் வடிகால் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 07**

செங்கோட்டை நகராட்சியில் ஈமக்கிரியை மான்யம் வழங்க கோரி 3 நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளதன் அடிப்படையில் நபர் ஒருவருக்கு ரூ.5000/- வீதம் மூன்று நபர்களுக்கு ரூ.15000/- ஈமக்கிரியை மான்ய தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவின தொகையை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 08**

செங்கோட்டை நகராட்சியில் பணிகள் மேற்கொண்டது. தணிக்கை தடை எழுப்பப்பட்டுள்ளது. தணிக்கைத் தடைக்கு உரிய தொகையை ஒப்பந்தக்காரர்களின் காலம் கடந்த வைப்புத் தொகையிலிருந்து கீழ்க்கண்டவாறு

| வ. எண் | தணிக்கை தடை எண் | தணிக்கை தடை விபரம் | ஒப்பந்தக்காரர் பெயர் | காலம் கடந்த வைப்புத் தொகையிலிருந்து ஈடு செய்யப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|---|
| 1. | 2017–18 (24 RF) | புதுப்பித்தல் கட்டணம் குறைவாக வசூலித்தது | டி.ஆபெல் ஜெயசீலன் | 600/– |
| 2. | 2017–18 (24 RF) | புதுப்பித்தல் கட்டணம் குறைவாக வசூலித்தது | யு.சேக் அப்துல் காதர் | 600/ |
| 3. | 2017–18 (24 RF) | புதுப்பித்தல் கட்டணம் குறைவாக வசூலித்தது | சேக் உதுமான் ஹக்கீம் | 600/ |
| 4. | 2017–18 (24 RF) | புதுப்பித்தல் கட்டணம் குறைவாக வசூலித்தது | எம்.சின்னதம்பி | 600/ |
| 5. | 2017–18 (24 RF) | புதுப்பித்தல் கட்டணம் குறைவாக வசூலித்தது | பி.ஜெயபாலன் | 600/ |
| 6. | 2017–18 (24 RF) | புதுப்பித்தல் கட்டணம் குறைவாக வசூலித்தது | பரமசிவம் | 500/– |
| 7. | 2017–18 (37 அ. RF) | தூய்மை இந்தியா திட்டம் நகராட்சி கலவை உரக்கிடங்கில் சிமிண்ட் தளம் அமைத்தல் | சேக் உதுமான் ஹக்கீம் | 3479/– |
| 8. | 2017–18 (39. RF) | MCC–தண்ணீர் வசதி செய்தல்<br>MCC–மின்வசதி<br>MCC–உரக்கிடங்கு | சேக் உதுமான் ஹக்கீம் | 3000/–<br>3000/–<br>3000/– |
| 9. | 2017–18 (39. RF) | முத்துசாமி பூங்கா பொதுக்கழிப்பிடம்<br>வல்லம் ரோட்டில் கழிப்பிடம் | டியஆபெல் ஜெயசீலன் | 3000/–<br>3000/– |
| 10. | 2017–18 (40 RF) | MCC–தண்ணீர் வசதி<br>MCC–மின் வசதி<br>MCC–நிர்வாக அலுவலகம்<br>MCC–சேமிப்பு கிடங்கு<br>MCC–சிமிண்ட் தளம் | சேக் உதுமான் ஹக்கீம் | 3000/–<br>3000/–<br>3000/–<br>3000/–<br>3000/– |

ஆக மொத்தம் ரூ.36,979/– ஒப்பந்தக்காரர்களின் காலம் கடந்த வைப்புத் தொகையில் ஈடு செய்து நகராட்சி கணக்கில் வரவு வைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றப்பொருள் : 09**

செங்கோட்டை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் துப்புரவு பணி மேற்கொள்ள மறு ஒப்பந்தம் கோரி விளம்பரம் செய்தி மக்கள் தொடர்பு துறை கடிதம் வெளியீட்டு ஆணை 1723/ஒப்பந்தப்புள்ளி/2025, நாள்:28.04.2025 மூலமாக மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் தினமலர் தினசரி நாளிதழில் 29.04.2025 அன்று விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு ரூ.10584/– வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவு தொகையினை வருவாய் மூல தன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 10**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண் 5 தெற்கு ரத வீதியில் உள்ள அடிபம்பை எடுத்து விட்டு புதிய மின் பவர் பம்ப் அமைக்கும் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்:126, நாள்:30.04.2025ன்படி மன்ற அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1. | வார்டு எண் 5 தெற்கு ரத வீதியில் உள்ள அடிபம்பை எடுத்து விட்டு புதிய மின் பவர் பம்ப் அமைக்கும் பணி | திரு.சேக் உதுமான் ஹக்கீம் | ஒப்பந்தபுள்ளி விகிதத்தை விட 0.02% அதிகம் |
| 2. | | திரு.P.சேக் அப்துல் காதர் | ஒப்பந்தபுள்ளி விகித்ததை விட 0.01% குறைவு |

. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியில் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள திரு.சேக் அப்துல் காதர் என்பவரின் ஒப்பந்தபுள்ளியை மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

குடிநீர் அல்லாத பயன்பாட்டின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றப்பொருள் : 11**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண் 3 கொட்டாரம் ரோட்டில் உள்ள அடிபம்பை எடுத்து விட்டு புதிய மின் பவர் பம்ப் அமைக்கும் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்:125, நாள்:30.04.2025ன்படி மன்ற அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1. | வார்டு எண் 3 கொட்டாரம் ரோட்டில் உள்ள அடிபம்பை எடுத்து விட்டு புதிய மின் பவர் பம்ப் அமைக்கும் பணி | திரு.சேக் உதுமான் ஹக்கீம் | ஒப்பந்தபுள்ளி விகிதத்தை விட 0.02% அதிகம் |
| 2. | | திரு.P.சேக் அப்துல் காதர் | ஒப்பந்தபுள்ளி விகித்ததை விட 0.01% குறைவு |

. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியில் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள திரு.சேக் அப்துல் காதர் என்பவரின் ஒப்பந்தபுள்ளியை மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

குடிநீர் அல்லாத பயன்பாட்டின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றப்பொருள் : 12**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண் 3 முப்புடாதி அம்மன் கோவில் அருகில் உள்ள அடிபம்பை எடுத்து விட்டு புதிய மின் பவர் பம்ப் அமைக்கும் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்:127, நாள்:30.04.2025ன்படி மன்ற அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1. | வார்டு எண் 3 முப்புடாதி அம்மன் கோவில் அருகில் உள்ள அடிபம்பை எடுத்து விட்டு புதிய மின் பவர் பம்ப் அமைக்கும் பணி | திரு.சேக் உதுமான் ஹக்கீம் | ஒப்பந்தபுள்ளி விகிதத்தை விட 0.02% அதிகம் |
| 2. | | திரு.P.சேக் அப்துல் காதர் | ஒப்பந்தபுள்ளி விகித்ததை விட 0.01% குறைவு |

. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியில் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள திரு.சேக் அப்துல் காதர் என்பவரின் ஒப்பந்தபுள்ளியை மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

குடிநீர் அல்லாத பயன்பாட்டின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றப்பொருள் : 13**

செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:19 வம்பளந்தான் முக்கு அருகில் அரசமரத்தருகில் உள்ள சின்டெக்ஸ் டேங்க் இரும்பு கம்பியில் உள்ளதால் அது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் அதனை சிமிண்ட் கட்டிடமாக மாற்றி அமைக்க உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) குடிநீர் அல்லாத பயன்பாட்டின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவு தொகையினை குடிநீர் வடிகால் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 14**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் அலுவலக தொலைபேசி செய்தியின் அடிப்படையில் நகராட்சி அலுவலகத்தில் "தமிழ் வாழ்க" என்ற ஒளிரும் LED Board அமைக்க உத்தேச செலவினம் ரூ.0.55க்கு (ஐம்பத்தைந்தாயிரம்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) அரசின் அறிவுறுத்தல் என்பதால் மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) இதற்கான செலவினத்தை வருவாய் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 15**

செங்கோட்டை நகராட்சி வார்டு 19 டீச்சர் வேலாயுதம் தெருவில் நடைபாதையில் கழிவு நீர் கால்வாய் செல்வதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு நோய் பரவும் அபாயம் உள்ளதால் மேற்படி கால்வாய்க்கு மூடி அமைக்க உத்தேச செலவினம் ரூ.0.25க்கு (இருபத்தைந்தாயிரம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) பொது சுகாதாரத்தின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவின தொகையை வருவாய் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப் பொருள் : 16**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண் 7,. சேர்வைக்காரன் புதுத் தெரு, A.G.School அருகில் அமைந்துள்ள ரேசன் கடையில் வயதானவர்கள், பெண்கள் ரேசன் பொருட்கள் வாங்கி செல்ல ஏதுவாக Stainless Stell கைப்பிடி அமைக்க உத்தேச செலவினம் ரூ.0.20க்கு (இருபதாயிரம்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம். செலவின தொகையை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 17**

செங்கோட்டை நகராட்சி பகுதிகளில் மழைக்காலங்களில் மரங்கள் அடிக்கடி சாலைகளில் விழுந்து விடுவதால் மேற்படி மரத்தினை வெட்டி அப்புறப்படுத்த ஒரு மரம் அறுக்கும் இயந்திரம் வாங்க நகர்மன்ற தீர்மான எண்:149, நாள்: 30.04.2025 அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | மரம் அறுக்கும் இயந்திரம் 1 எண்ணம் கொள்முதல் செய்யும் பணி | ரூ.15,000/- | திரு.சேக் அப்துல் காதர் | 14,000/- |
| | | | திரு.U.சேக் உதுமான் ஹக்கீம் | 16,000/- |

. வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள திரு.சேக் அப்துல் காதர் என்பவரின் விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றப்பொருள் : 18**

இந்நகராட்சியிலுள்ள பூங்கா மற்றும் கேசி ரோடு மற்றும் பம்பு ஹவுஸ் ரோடில் அமைந்துள்ள நீர்நிலையங்களில் புல் மற்றும் செடி, கொடிகள் அடிக்கடி வளர்வதால் அகற்ற சுகாதார கேடு ஏற்பட்டு வருவதால் மேற்படி புல் மற்றும் செடி, கொடிகளை உடனுக்குடன் வெட்டி அகற்றும் பொருட்டு ஒரு புல் வெட்டும் இயந்திரம் வாங்க நகர்மன்ற தீர்மான எண்:148, நாள்: 30.04.2025 அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | ஒரு புல் வெட்டும் இயந்திரம் 1 எண்ணம் கொள்முதல் செய்யும் பணி | ரூ.35,000/- | திரு.சேக் அப்துல் காதர் | 34,500/- |
| | | | திரு.U.சேக் உதுமான் ஹக்கீம் | 36,000/- |

. வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள திரு.சேக் அப்துல் காதர் என்பவரின் விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றப்பொருள் : 19**

செங்கோட்டை நகராட்சியின் 2024-2025ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்

**மன்றப்பொருள் : 20**

செங்கோட்டை நகராட்சி பிரதான பகுதியான வாஞ்சிநாதன் சிலை முன்பு உள்ள Highmass 200W LED Light 6 Nos, 440 Voltage இடி மின்னல் காரணமாக பழுது ஏற்பட்டு எரியாமல் உள்ளது என மின்பணியாளர் அறிக்கை செய்துள்ள நிலையில் உயர்மின்கோபுர 6 நம்பர் LED Light-னை பழுது நீக்கம் செய்வதற்கான மதிப்பீடு நகராட்சி பொறியாளர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்)க்கு அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி செலவின தொகையினை வருவாய் மூலதன நிதியில் மேற்கொள்ளவும்

R. ராமலட்சுமி.

இடம் : செங்கோட்டை
நாள் : 21.05.2025

நகர்மன்றத் தலைவர்
செங்கோட்டை நகர்மன்றம்

நகல் :
1. மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள்,தென்காசி பாராளுமன்றம்.
2. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கடையநல்லூர் சட்ட மன்ற உறுப்பினர் அலுவலகம், கடையநல்லூர்.
3. அனைத்து பத்திரிக்கை நிருபர்கள்
ஆணையாளர்/பொறியாளர்/மேலாளர் மேஜைக்கு
நகல் : பொதுப்பணி மேற்பார்வையாளர்/துப்புரவு ஆய்வாளர்/வருவாய் ஆய்வாளர்/ நகரமைப்பு ஆய்வாளர்

# செங்கோட்டை நகராட்சி
## (சாதாரண கூட்டம்) – 27.05.2025
### பிற்சேர்க்கை மன்றப்பொருள்

**மன்றப்பொருள் :21**

செங்கோட்டை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 24 வார்டுகளிலும் குப்பைகளை தரம் பிரித்து வாங்கும் பணியை வெளிக்கொணக்வு முகமை மூலம் மேற்கொள்ள 15.05.2025 அன்று பொது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற BRP Agencies என்ற நிறுவனத்தின் தொழில் நுட்ப உறைகள் மட்டுமே தகுதி பெற்றுள்ளதால் ஒப்பந்தபுள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | ஒப்பந்த விகிதம் BRP Agencies |
|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மை பணிகள் | ரூ.5747.00 |

மதிப்பீட்டை விட 0.20% குறைவான ஒப்பந்த விகிதம் வழங்கியுள்ள BRP Agencies நிறுவனத்தின் ஒப்பந்தத்தை மன்றம் ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு :

1) பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவின தொகையினை பொது நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 22**

செங்கோட்டை நகராட்சி முத்துசாமி பூங்கா வளாகத்தில் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்:6450/2024/SBM(1), நாள்:14.03.2024ன்படியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்:2800/2022/ஆ2, நாள்:14.4.2024 அடிப்படையில் ரூ.1.28 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீடு ரூ.1.28 இலட்சத்தில் உள்ளாட்சி அரசு மானியம் ரூ.1,06,240ம் நகராட்சி பங்குத் தொகை ரூ.21,760ம் அடங்கும். மேற்கண்ட நகராட்சி பங்குத் தொகை ரூ.21,760/–க் செலவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவின தொகையினை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 23**

செங்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் உள்ள மின் மோட்டார் மற்றும் மின் மயானத்தில் உள்ள மின் மோட்டார் ஆகியவற்றை பழுது நீக்கம் செய்ய மன்ற அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் (மன்ற தீர்மான எண்:107, நாள்:30.04.2025) விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளி வழங்கியவர்கள் விபரம் | | |
|---|---|---|---|---|
| | | Hi Tech | M.M.Gani | இப்ராகிம் எலக்ட்ரிக்கல்ஸ் |
| 1. | செங்கோட்டை நகராட்சி நவீன மின் மயானத்தில் உள்ள 2HP மோட்டார் பழுது நீக்கும் பணி | ரூ.7200/– | ரூ.7800/– | ரூ.8000/– |
| 2. | நகராட்சி அலுவலகத்தில் உள்ள 2HP Sub மோட்டார் பழுது நீக்கம் செய்யும் பணி | ரூ.2800/– | ரூ.4950/– | ரூ.5050 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள Hi Tech நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு :

1) குடிநீர் அல்லாத பயன்பாட்டின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவின தொகையினை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

நகர்மன்றத் தலைவர்

செங்கோட்டை நகர்மன்றம்

செங்கோட்டை நகரமன்றத்தின் 27.5.2025 அன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் நடவடிக்கை எடுகுறிப்பு

| வ.எண் | பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 157 | குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள திரு முல்லைவாயில் ஸ்டேஷனரி பிரிண்டிங் கோ.ஆப்.சொசைட்டி சென்னை அவர்களின் விலைவிகிதம் ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| 2 | 2 | 158 | உயர்ந்த ஏலக்கேள்வி கோரியுள்ள திரு எல்.சுப்பிரமணியன், அவர்களின் கேள்வியினை அனுமதித்து அனுமதி வழங்கப்பட்டது. |
| 3 | 3 | 159 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 4 | 4 | 160 | அனுமதி வழங்கப்பட்டது |
| 5 | 5 | 161 | குறைந்த விலைவிகிதம் அளித்துள்ள ஸ்கைலைன் நிறுவனத்தின் விலைப்புள்ளிக்கு அனுமதி வழங்கப்பட்டது. |
| 6 | 6 | 162 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| 7 | 7 | 163 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 8 | 8 | 164 | அனுமதி வழஙகப்பட்டது. |
| 9 | 9 | 165 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 10 | 10 | 166 | குறைந்த விலைவிகிதம் அளித்துள்ள திரு சேக் அப்துல் காதர் அவர்களின் விலைவிகிதம் ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| 11 | 11 | 167 | குறைந்த விலைவிகிதம் அளித்துள்ள திரு சேக்அப்துல் காதர் அவர்களின் விலைவிகிதம் ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| 12 | 12 | 168 | குறைந்த விலைவிகிதம் அளித்துள்ள திரு சேக்அப்துல் காதர் அவர்களின் விலைவிகிதம் ஏற்றும் அனுமதி வழஙகப்பட்டது. |
| 13 | 13 | 169 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 14 | 14 | 170 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 15 | 15 | 171 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 16 | 16 | 172 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 17 | 17 | 173 | குறைந்த விலைவிகிதம் அளித்துள்ள திரு சேக்அப்துல் காதர் அவர்களின் விலைவிகிதத்தினை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| 18 | 18 | 174 | குறைந்த விலைவிகிதம் அளித்துள்ள திரு சேக்அப்துல் காதர் அவர்களின் விலைவிகிதத்தினை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| 19 | 19 | 175 | பதிவுசெய்யப்பட்டது. |
| 20 | 20 | 176 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 21 | 21 | 177 | குறைந்தவிலைவிகிதம் ரூ 5747/-க்கு மன்ற அனுமதி வழங்கப்பட்டது. |
| 22 | 22 | 178 | அனுமதி அளிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 23 | 23 | 179 | குறைந்த விலைவிகிதம் அளித்துள் 'ஹைடெக் நிறுவனத்தின் விலையை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |

(ஒம்) ரா.ராமலட்சுமி
நகர்மன்ற தலைவர்

பெறுநர்,
நகர்மன்ற துணைத்தலைவர் அவர்கள்,
அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள் செங்கோட்டை நகரமன்றம்

நகல்.. ஆணையாளர்/மேலாளர் /பொறியாளர் மேசைக்கு
நகல்.. அறிவிப்பு பலகை
நகல்.. கணினி உதவி திட்ட அமைப்பாளர், இணையதள பதிவிற்காக

/உண்மை நகல்/

COMMISSIONER
SENGOTTAI MUNICIPALITY